**HC JN IV– 2020**

பதிவு எண் / Register No.

| |
|---|
| |

SEAL

# சட்டத் தாள் III

# LAW PAPER III

**(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)**

**(Tamil & English Versions)**

TNPSC - SPECIMEN

நேரம் : 3 மணி — மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours — Max. Marks : 100

*தேர்வர்களுக்கான பொது குறிப்புகள் :*

*General Instructions to candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண்கள், ஆவணங்களின் விபரங்கள், தரப்பினர்களின் பெயர் மற்றும் சாட்சிகள் ஆகியவை கற்பனையே. இருப்பினும், தேர்வர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question Paper i.e., the court's name, place, case numbers, documents details, names of parties and witnesses are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purpose of answering the questions.

ii) தேர்வர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடை அளிக்க வேண்டும். ஆனால் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாறிமாறி விடையளிக்க கூடாது.

Candidates may write the answers either in English or in Tamil but not in both.

iii) வினாத்தாளானது தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவே இறுதியானது.

The Question Paper is provided in Tamil and English versions. In all matters and in case of doubt, English version is final.

iv) தேர்வர்கள் தங்களை நீதிமன்றத்தின் நடுவராக அனுமானித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விக்குரிய விபரங்களை பரிசீலித்து ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக தேவையான குற்றச்சாட்டுகளை வனைந்து கொடுக்கப்பட்ட சங்கதிகள் அடிப்படையில் தீர்ப்பை எழுத வேண்டும்.

The candidates have to assume themselves as Presiding Officers and to consider the details furnished in the question and frame necessary charges specifically against each accused if required and write judgment on the facts given.

v) தேர்வர்கள் வழக்கின் தலைப்பு, வழக்கு எண், நீதிபதியின் பெயர், வழக்கு எண், ஆவணங்களின் பட்டியல், தரப்பினர்களுக்காக ஆஜராகும் வழக்கறிஞர்களின் பெயர்கள், ஆவணங்களின் பட்டியல் மற்றும் சான்று போன்றவற்றை எழுதத் தேவையில்லை. அவ்வாறு எழுதினாலும் வழக்கின் தலைப்புக்கு மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சாட்சியங்களை பரிசீலிக்கும் விதம், சங்கதிகளுக்கு பொருந்தும் சட்டத்தை பரிசீலிக்கும் விதம் மற்றும் வினாக்களுக்கு தேர்வர்கள் எழுதும் முடிவுக்கான காரணங்களின், அடிப்படையிலேயே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

Candidates need not write the cause title of the case, case number, name of the judge, case number, names of the counsel appearing for the parties, list of documents, evidence etc, which would be indicative in nature. No marks will be awarded for writing the cause title etc. Marks will be awarded based on the apreciation of facts and evidence, application of law on the facts, reasoning given by the candidates for arriving at whatever conclusion they have reached.

vi) இந்தப் பிரிவில் நான்கு கேள்விகள் உள்ளன. ஒவ்வொரு கேள்வியும் 25 மதிப்பெண்களை கொண்டது.

There are 4 questions in this section and each question carries 25 marks.

vii) வினாக்களுக்கு விடையளிக்கும்போது முன் தீர் முடிவு வழக்கின் விவரப்பட்டியலை அளிக்க வேண்டியதில்லை. தவறான அல்லது முழுமை பெறாத விபரப்பட்டியலை வழங்குதல் தேர்வர்களுக்கு பாதகமாக அமையும்.

The candidates need not provide cause title with citation while answering questions. Providing wrong or incomplete cause title or quoting a wrong citation will be detrimental to the candidates.

viii) சிறப்புச் சட்டங்கள் தொடர்பான கேள்விகளில் தேர்வர்கள் குற்றச்சாட்டுகளை வனையத் தேவையில்லை.

The candidates need not frame charges in the questions relating to Special Acts.

TNPSC - SPECIMEN

1. பல்வகை வழக்கு எண். 15/2010

| | | |
|---|---|---|
| வனஜா | – | மனுதாரர் |
| | எதிர் | |
| 1. வாழயில் சாந்தா | | |
| 2. ஜிதேஷ் | – | எதிர் மனுதாரர்கள் |

TNPSC-SPECIMEN

புகாரில் குறிப்பிடப்பட்ட சங்கதிகள் :

மனுதாரர் மனீஷ் நாத் என்பவரின் மனைவி ஆவார். அவர்களின் திருமணம் 13.7.2001 ல் நடைபெற்றது. திருமணத்துக்கு பின், மனுதாரர் பல்லூரில் உள்ள வாழயில் வீட்டில் குடியிருந்தார். மனுதாரருக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறது.

1 ம் எதிர் மனுதாரர் மனுதாரரின் மாமியார், 2 ம் எதிர் மனுதாரர் மனுதாரரின் கணவரின் சகோதரர் ஆவார். மனுதாரரும் அவரது கணவரும் குடியிருக்கும் அதே வீட்டில்தான் எதிர் மனுதாரரும் குடியிருந்து வருகிறார்கள்.

திருமணத்தின்போது மனுதாரரிடம் 35 சவரன் தங்க நகை இருந்தது. 1 ம் எதிர் மனுதாரர் மனுதாரரின் தங்க நகைகளை கொடுக்கும் படியும் அதை திரும்ப கொடுத்து விடுவதாகவும் கூறினார். அந்த நகைகளை பெற்றுக் கொண்டுவிட்டு, திரும்ப கொடுக்க மறுத்து விட்டார். 2 ம் எதிர் மனுதாரரும் மனுதாரரிடமிருந்து நகை மற்றும் பணத்தை பறிக்க முயற்சித்தார். எதிர் மனுதாரர்கள். மனுதாரரை அவர் குடியிருக்கும் வீட்டிலிருந்து காலி செய்ய வஞ்சகமாக கூட்டு சேர்ந்திருக்கிறார்கள்.

எதிர் மனுதாரர்கள் மனுதாரரின் உடைகளில் தீ வைத்து மனுதாரரை கொல்லவும் அவருடைய வீட்டு உபயோகப் பொருட்களை அழிக்கவும் முயற்சித்ததால், மனுதாரர் 11.5.2010 அன்று நீதிமன்றத்தில் இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகள் 498–அ, 420 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கு ஒரு புகார் மனுவை தாக்கல் செய்தார். 21.5.2010 அன்று மனுதாரர் சமையலறையில் இருந்தபோது, 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைக்க முற்பட்டார். மனுதாரர் உடனடியாக படுக்கையறைக்கு சென்று உள்ளே கதவை சாத்திக் கொண்டார். பின்னர் மனுதாரர் வீட்டை விட்டு வெளியே வந்து பல்லூர் காவல் நிலையத்தில் ஒரு புகார் மனுவை கொடுத்தார். மனுதாரர் பட்ட கஷ்டங்களுக்கான நஷ்ட ஈட்டை மனுதாரர் ரூ.5,00,000/– ஆக மதிப்பீடு செய்கிறார். பெண்களை குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் வேறு சில பரிகாரங்களையும் மனுதாரர் கோருகிறார்.

எதிர் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை :

திருமணத்திற்கு பின் சில மாதங்கள் மட்டுமே மனுதாரர் வாழயில் வீட்டில் குடியிருந்தார். பின்னர் பேராவூருக்கு சென்று அங்கே சில வருடங்கள் மனுதாரர் தங்கியிருந்தார். மனுதாரரும் அவர் கணவரும் வாழயிலில் உள்ள வீட்டில் எப்பொழுதும் தொடர்ந்து குடியிருக்கவில்லை. 1 ம் எதிர் மனுதாரர் மனுதாரரின் ஆபரணங்களை வாங்கவும் இல்லை. அவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொல்ல முற்படவும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில், மனுதாரர் எதிர் மனுதாரர்களின் வீட்டுக்கு வந்து அவர் தலையில் அவரே மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு காவல் நிலையத்திற்கு சென்றார். இந்திய தண்டனை சட்டம் பிரிவு 498–அ வரும் வகையில் எதிர் மனுதாரர்களை ஒரு குற்ற வழக்கில் சிக்க வைப்பதற்காக மனுதாரர் ஒரு புகார் மனுவை கொடுத்தார்.

மனுதாரர்கள் வீட்டிலிருக்கும் போது தேவையில்லாமல் சண்டையிட்டு மனுதாரரும் அவரது கணவரும் வீடு மற்றும் சொத்தில் பங்கு கேட்டார்கள்.

மனுதாரர் தரப்பு சாட்சியம் :

ம.சா.1 மனுவில் கண்டுள்ள சங்கதிகளையே சாட்சியமாக கூறியிருக்கிறார். மனுதாரரின் திருமணம் 2001 ல் நடந்தது. எதிர் மனுதாரர்களின் வீட்டில் மனுதாரர் $1\frac{1}{2}$ வருடம் குடியிருந்தார். திருமணமான ஒரு வாரத்திற்குள் வெவ்வேறு தேதிகளில் நகைகள் கொடுக்கப்பட்டது. $1\frac{1}{2}$ வருடங்கள் கழித்து மனுதாரர் பேராவூரில் உள்ள வாடகை வீட்டிற்கு குடியேறி தன் கணவர் குழந்தைகளுடன் அங்கே 4 வருடம் குடியிருந்தார். பின்னர் மைசூருக்கு சென்று அங்கே ஒரு வருடம் குடியேறினார்.

ம.சா.1 ன் கணவரான ம.சா.2 தன் சாட்சியத்தில் அவர்கள் 4 வருடம் மைசூரில் குடியிருந்ததாகவும், இம்மனுவை தாக்கல் செய்வதற்கு முன்னர் மனுதாரர் சொத்தில் குடியிருக்க வில்லை என்றும் கூறியிருக்கிறார்.

விசாரணைக்கு பின் பாதுகாப்பு அதிகாரி நீதிமன்றத்திற்கு அனுப்பிய அறிவிப்பில் மனுதாரருக்கெதிராக குடும்ப வன்முறை நடந்ததாக தன் கவனத்துக்கு வரவில்லை என்று கூறியிருக்கிறார். மனுதாரர் தன் கணவருடன் அடிக்கடி சண்டையிட்டதும், தன் குழந்தைகளின் படிப்பை மனுதாரர் சில தடவை பாதியில் நிறுத்திவிட்டதும் கலந்தாய்வின்போதும் விசாரணையின்போதும் பாதுகாப்பு அதிகாரி அறிந்தார். மனுதாரர் வீண் செலவு செய்யும் ஊதாரி குணமுடையவர். சில தடவைகள் அவர் கடன்பட்டிருக்கிறார். 2 ம் எதிர் மனுதாரரின் திருமணத்திற்கு பின்னர் தான் பிரச்சனை ஆரம்பமானது. மனுதாரரின் மாமியார் மனுதாரரை கவனிக்க வில்லை என்று மனுதாரர் எண்ணினார். மனுதாரர் தன் மாமியாருடன் அடிக்கடி சண்டைபோட்டார். மனுதாரர் சந்தேகப் புத்தி உடையவர் என்பதாலும் ஆபத்தானவர் என்பதாலும் மனுதாரரை மீண்டும் சேர்த்துக் கொள்ள எதிர் மனுதாரர்கள் தயாராக இல்லை.

மனுதாரர் தரப்பு வாதம் :

திருமணத்திற்கு பின் மனுதாரர் 1 ம் எதிர் மனுதாரரின் வீட்டில் ஒரு தடவை குடியிருந்தாலே அது பிரிவு 2(எஸ்) ல் குறிப்பிடப்பட்ட உடன் குடியிருப்பவர் என்ற வரையறைக்குள் வரும். இந்த நீதிமன்ற உத்தரவு மூலம் அந்த வீட்டில் குடியிருக்க மனுதாரருக்கு உரிமை இருக்கிறது.

எதிர் மனுதாரர்களின் வாதம் :

இம்மனுவை தாக்கல் செய்வதற்கு முன்போ அல்லது வேறு எக்காலத்திலோ எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து மனுதாரர் குடியிருந்திருக்க வேண்டும். மனுதாரர் அவருடைய குடும்ப உறுப்பினர்களுடன் குடியிருந்து குடும்பத்தை ஏற்படுத்தினார். மனுதாரர் தனிக்குடும்பமாக வெவ்வேறு இடங்களில் குடியிருந்தார். மனுதாரர் திருமணம் நடந்தவுடன் 1 ம் எதிர் மனுதாரரின் வீட்டில் குடியிருந்ததாலேயே குடும்பத்தை பகிர்ந்து கொண்டதாக மனுதாரர் கோர முடியாது.

வாழயிலில் உள்ள வீடு 1 ம் எதிர் மனுதாரரின் கணவர் பெயரில் இருக்கிறது. அதை ஒட்டியிருக்கும் காலியிடம் 1 ம் எதிர் மனுதாரர் பெயரில் இருக்கிறது. மனுதாரரின் கணவரின் கூட்டு குடும்ப சொத்து இல்லை. கூட்டு குடும்ப உறுப்பினர் என்ற முறையில் அந்த வீட்டில் குடியிருக்க மனுதாரரின் கணவருக்கு உரிமை இல்லை.

TNPSC-SPECIMEN

M.C. 15/2010

Vanaja, Petitioner

Vs.

1. Vazhayil Santha,

2. Jithesh, Respondents

The facts stated in the complaint :

The complainant is the wife of Maneesh Nath and their marriage was duly solemnized on 13.07.2001. After the marriage, she was residing at Vazhayil House, Palloor. The complainant has got two children.

The respondent No.1 is the mother in law and the respondent No.2 is her husband's brother. Both are residing in the above said House where the complainant and her husband reside.

The complainant was in possession of 35 sovereign of gold ornaments at the time of her marriage. The respondent No.1 used to demand for gold ornaments from the complainant with assurance to redeliver the same shortly. However, after getting the gold ornament, she refused to redeliver the gold ornaments. The respondent No.2 made evil attempts to extract gold and money from the complainant. The respondents colluded with each other to evict the complainant from the shared house hold.

As the respondents made arrangement to kill the complainant and destroy her house hold articles by setting fire on her clothes, she lodged a complaint for offences punishable u/s 498 A, 420 r/w 34 IPC before the court on 11.05.2010. On 21.05.2010, while the complainant was in the kitchen, the respondent No.1 poured Kerosene over the complainant and tried to set fire. Immediately, the complainant rushed to her bedroom and closed the door. Later, the complainant came out from the said house and rushed to Palloor Police Station and lodged a complaint. The complainant assessed Rs.5,00,000/- as compensation for the hardship suffered and prayed for other reliefs under the Prevention of Women from Domestic Violence Act.

The counter filed by the respondents :

After the marriage, only for few months, the petitioner resided in the Vazhayil house and shifted her residence to Peravoor and stayed there for few years. The complainant and her husband never resided at Vazhayil House continuously. The respondent No.1 never received any of the ornaments of the complainant nor tried to kill the complainant by pouring kerosene. On the day of the alleged incident, the complainant came to the house of the respondents and poured kerosene on her head and rushed out and approached the police. She lodged a complaint against the respondents to attract section 498 A of Indian Penal Code to trap the respondents in a criminal case.

The complainant and her husband were claiming share in the house and the property by making unnecessary quarrel while they were in the house.

TNPSC-SPECIMEN

Evidence on the side of complainant :

PW1 deposed the facts stated in her complaint. Her marriage took place in the year 2001 and she was residing in the house of the respondents only for $1\frac{1}{2}$ years. The jewels were entrusted on different dates within one week from the date of marriage. After $1\frac{1}{2}$ years, the petitioner occupied a rented house in Peravoor and living along with her husband and children for 4 years and thereafter shifted her residence to Mysore and resided there for 1 year.

PW2, the husband of PW1, had deposed that they have been in Mysore for the past 4 years and he is running a bakery. The Petitioner was not residing in the petition property immediately prior to the filing of the petition.

The protection officer, after enquiry, sent a report to the court stating that he did not notice any domestic violence against the petitioner. During counseling as well as during enquiry by the Protection Officer, he noticed that the petitioner Vanaja had frequent quarrel with her husband and discontinued her children's education for few times. She is an extravagant nature and sustained debts few times. The problem started after the marriage of the respondent No. 2 as she felt that her mother in law has not paid attention on her. She quarreled frequently with her mother in law. The respondents are not prepared to take the petitioner because of her suspecting nature and sense of danger.

The Petitioner's Argument :

Once the petitioner had lived in the house of the respondent No.1 soon after her marriage, the same would come within the definition of shared household u/s 2(s) of the Act, and she is entitled to reside in the said house by an order of this court.

The Argument of Respondents :

The complainant soon before filing of the petition or at any point of time must be residing in the shared household along with the respondents. The Petitioner was residing with her own family members and established her own household and started living separately at different places. The petitioner cannot claim that the house of the respondent No.1 wherein she was living immediately after her marriage, is her shared household.

Vazhayil House is in the name of the husband of the respondent No.1. The adjacent vacant land is now in the name of the respondent No.1. It is not a joint family property of the petitioner's husband and her husband has no right to reside in the said house as a member of the joint family.

TNPSC - SPECIMEN

2. ஆண்டு பட்டிகை வழக்கு எண். 163/1999

அரசுக்காக அதன்

நிலைய பொறுப்பு அதிகாரி – குற்ற முறையீட்டாளர்

தவளக்குப்பம் காவல் நிலையம்

எதிர்

1. பாண்டு (29),
2. சுரேஸ் பாபு (31),
3. கே.ஆர். பாபு என்ற சத்தியமூர்த்தி (30) – எதிரிகள்
4. ராமமூர்த்தி (30)

29.12.1998 இரவிலிருந்து 30.12.1998 அன்று விடியற் காலைக்குள் பாண்டிச்சேரி, தவளகுப்பம், கடலூர் பிரதான சாலையில் உள்ள நிகழ்நிலை புகார்தாரர் சிவகுமாருக்குரிய கதவு எண். 196 என்ற வீட்டின் முன்பு கல்யாணி என்பவர் வசம் இருந்த ரூ. 3,00,000/– மதிப்புடைய பிஒய்–01–இ–0369 என்ற பதிவு எண் கொண்ட ஒரு அம்பாசிடர் காரை எதிரிகள் திருடிவிட்டார்கள் என தவளகுப்பம் காவல் நிலை பொறுப்பு அதிகாரி ஒரு இறுதி அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்.

அரசு தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட சாட்சிகள் மூலம் அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ 14 மற்றும் சா.பொ. 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> :

அ.சா. 1 ஆன சிவகுமார் தன் சொந்த உபயோகத்திற்காக பி.ஒய்–01–இ–0369 என்ற பதிவு எண். கொண்ட காரை வைத்திருப்பதாகவும், 29.12.1998 அன்று இரவு 10 மணிக்கு தன் வீட்டின் முன்பகுதியில் காரை பூட்டி நிறுத்தியிருந்ததாகவும், 30.12.1998 அன்று அதிகாலை 3.30 மணிக்கு வீட்டிற்கு வெளியே வந்தபோது, தன் காரை காணவில்லை என்றும் அ.சா.1, அ.சா.ஆ. 1 புகார் மனுவை கொடுத்தார். அந்த புகாரைப் பெற்றுக் கொண்ட அ.சா. 9 ஆன சார்பாய்வாளர் கு.எண். 100/1998 ல் இ.த.ச. பிரிவு 379 கீழ் அ.சா.ஆ. 13 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அவர் வழக்கின் கோப்பை மேல் புலன் விசாரணைக்காக காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தார். புலன் விசாரணை அதிகாரி, தகவலின் பேரில் 30.12.1998 அன்று 12.30 மணிக்கு கொலியனூர் சாலையில் எதிரிகளை சா.பொ. 1 காருடன் கண்டறிந்து எதிரிகளை கைது செய்து அ.சா. 5 மற்றும் 6 முன்னிலையில் அ.சா.ஆ. 14 கைப்பற்று அறிக்கை தயார் செய்து 1 மணியளவில் வாகனத்தை கைப்பற்றி, எதிரியையும் சா.பொ. 1 வாகனத்தையும் காவல்துறை கண்காணிப்பாளர் முன்பு முன்னிலைப்படுத்தினார். மேற்கட்ட புலன் விசாரணையில், அ.சா. 10 ஆன பைரோஸ் ஜியா உசைன் என்ற காவல்துறை கண்காணிப்பாளர் அ.சா.1, தனராஜ் மற்றும் நடராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார். அவர் எதிரிகளை விசாரித்து அவர்களின் ஒப்புதல் வாக்கு மூலங்களை பதிவு செய்தார். அ.சா. 11 ஸ்டாலின் ஜேசன் என்ற மற்றொரு காவல் கண்காணிப்பாளர் கல்யாணி என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார். அவர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.



TNPSC - SPECIMEN

குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 313 ன் கீழ் எதிரிகளிடம் கேள்விகள் கேட்கப்பட்டபோது அவர்கள் அதை மறுத்தார்கள். தங்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை என்று கூறினார்கள்.

எதிரிகள் மகாவீர் பைனான்ஸ் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தின் ஊழியர்கள் என்றும் வாகனம் தவணை கொள்முதலில் சம்மந்தப்பட்டது என்றும் ஒப்புக்கொண்டார்கள். கல்யாணி என்பவர் தவணை தொகைகளை செலுத்தவில்லை என்றும் தங்களது முதலாளியின் அறிவுறுத்தலின்படி அ.சா. 1 ன் வீட்டிலிருந்து அந்த வாகனத்தை எடுத்தோம் என்றும் எதிரிகள் கூறினார்கள்.

அ.சா. 1 கல்யாணி என்பவரின் மகனாவார். அ.சா. 2 கல்யாணி என்பவரின் கணவராவார்.

அ.சா. 3 இலட்சுமிநாராயணன் தனது சாட்சியத்தில் எதிரிகள் அந்த நிறுவனத்தின் வேலையாட்கள் என்றும் வாகனம் தவணை கொள்முதலில் சம்மந்தப்பட்டது என்றும் நிதி நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய தவணைகளில் பாக்கி இருந்தது என்றும், ஆகவே அவர்கள் ஒரு அறிவிப்பை அனுப்பினார்கள் என்றும், பணத்தை செலுத்த தவறியதால் அந்த வாகனத்தை வீட்டிலிருந்து எடுக்க நிதி நிறுவனம் எதிரிகளுக்கு அதிகாரம் வழங்கியது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா. 4 ஆன மகஜர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டார்.

அ.சா. 5 மற்றும் 6 ஒப்புதல் வாக்குமூலங்களில் கண்டுள்ள சாட்சிகளும் பிறழ் சாட்சிகளாக மாறி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

அ.சா. 7 ராமசுந்தரம் என்ற தலைமை காவலர் அ.சா. 1 முதல் அ.சா. 6 வரையிலான சாட்சிகள் மற்றும் மற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார்.

அ.சா. 8 என்பவர் அ.சா.ஆ. 12 மகஜரின் அடிப்படையில் தனராஜ் என்பவரிடமிருந்து நிதி நிறுவன இரசீதை கைப்பற்றியதற்கான மகஜர் சாட்சியாவார்.

அ.சா. 9, 10 மற்றும் 11 ஆகியோர்கள் புலன் விசாரணை அதிகாரிகள் ஆவார்கள்.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதம்</u> :

அ.சா. 1 எதிரிகள் யாரையும் அடையாளம் காட்டவில்லை. 1 முதல் 4 வரையிலான எதிரிகளின் வெளிப்படையான செயல் குறித்து புகாரில் குறிப்பிடப்படவில்லை.

அ.சா. 2 முதல் 6 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டார்கள். தவறான எண்ணம் குறித்து அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு கொடுக்க வேண்டும்.

TNPSC-SPECIMEN

C.C NO. 163/1999
State, rep. by
Station House Officer,
Thavalakuppam Police Station,

.... Complainant

Vs.

1. Pandu (29),
2. Suresh Babu (31),
3. K.R. Babu @ Sathiyamoorthy (30),
4. Ramamoorthy (30), .... Accused

The Station House Officer, Thavalakuppam Police Station has laid a Final report against the accused persons alleging that between 29.12.1998 night hours and 30.12.1998 early morning, in front of the house of the de facto complainant Sivakumar at door No. 196, Cuddalore Main Road, Thavalakuppam, Pondicherry, the accused persons committed theft of one Ambassador car bearing Regn. No. PY-01-E-0369 worth Rs. 3,00,000/- in the possession of one Kalyani.

The prosecution has examined PWs-1 to 11 and marked Exs.P-1 to 14 and M.O-1 through relevant witnesses.

The case of the prosecution in brief is as follows :

PW-1, Sivakumar, the de facto Complainant lodged Ex.P-1 complaint stating that he has a car bearing Regn. No. PY-01-E-0369 for his personal use and on 29.12.1998 at about 10.00 p.m. he parked a car in the portico of his house under lock. On 30.12.1998 at 3.30 a.m. when he came out, the car was found missing. On receipt of the complaint, PW-9, S.I. of Police, registered a case in Cr. No. 100/98 u/s. 379 IPC as per FIR Ex.P-13, and handed over the case file to the Superintendent of Police for further investigation. On 30.12.1998 at 12.30 hours under instruction, he spotted the accused at Koliyanur Salai with M.O-1 car and arrested them and seized the vehicle at 13.00 hours under Ex.P-14 seizure form in the presence of PWs-5 and 6 and produced the accused along with M.O-1 before the Superintendent of Police. On further investigation, PW-10, Firoze Zia Hussain, Superintendent of Police examined PW-1, Dhanaraj and Natarajan and recorded their statements. On production of the accused before him, he interrogated them and recorded their confession statements. PW-11, another Superintendent of Police, Stalin Jason, examined one Kalyani and recorded her statement and after completing the investigation, laid charge sheet against the Accused.
When the accused persons were questioned u/s. 313 Cr.P.C, they denied the same and opted to have no oral evidence.

TNPSC - SPECIMEN

The accused have admitted that they were the employees of Mahaveer Finance India Limited and the said vehicle was involved in the hire purchase. As the said Kalyani was in default of paying the installments, as per the instructions of their employer, the said vehicle was lifted from the house of PW-1.

PW-1 is the son of one Kalyani, and PW-2 is the husband of the said Kalyani.

PW-3, Lakshminarayanan has deposed that the vehicle was involved in hire purchase and the accused were the employees of their Company. The vehicle involved in the above case is under hire purchase and there was arrears in payment of dues to the said Finance Company and based on that, they have issued a notice and in default of the payment, the accused were authorized by the Finance Company to lift the said vehicle from the premises.

PW-4 is the mahazar witness, turned hostile.

PWs-5 and 6 are the witnesses for the confession statement and they have also turned hostile and have not supported the prosecution case.

PW-7, Ramasundaram, Head Constable has deposed that he recorded the statements of PWs-1 to 6 and others.

PW-8 is the mahazar witness for the seizure of finance company receipt from one Dhanaraj under cover of mahazar Ex.P-12.

PW-9, 10 and 11 are the Investigating Officers in the above case.

<u>Argument of Accused's Counsel</u> :

PW-1 has not identified the accused. The overt act of A-1 to A-4 has not been stated in the complaint.

PWs-2 to 6 have turned hostile.

No wrongful intention was established by the prosecution, and the benefit of doubt shall be given to the accused.

TNPSC - SPECIMEN

3. ஆண்டு பட்டிகை வழக்கு எண். 36/2009

அரசுக்காக நிலைய பொறுப்பு அதிகாரி
மாஹே காவல் நிலையம்
குற்ற எண். 158/2006

– குற்ற முறையீட்டாளர்

எதிர்.

கே.பி. சுமேஷ் பாபு (31) – எதிரி

அரசு தரப்பு வழக்கு :

26.12.2006 அன்று மாஹே துணை வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக பணியாளராக வேலை பார்க்கும் சி.எஸ் ராதாகிருஷ்ணன் என்பவர் துணை வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் மாஹே வாக்காளர் பதிவு அலுவலரின் கையெழுத்து முத்திரையைப் பெற்று வருவதற்காக சத்தியன் என்பவரின் வீட்டிற்குச் சென்றார். அவரிடம் சத்தியன் என்பவரின் மனைவி மாஹே செம்ப்ரா சாலக்காரா கிராம நிர்வாக அலுவலரின் பெயரில் உள்ள முத்திரையை சுமேஷ் என்பவர் பெற்றுச் சென்றதாக தெரிவித்தார். அவரிடம் ஒப்படைப்பு பதிவேட்டையும் காட்டினார். எதிரி அந்த பதிவேட்டில் 93 வது பக்கத்தில் 03.12.2006 தேதியிட்டு கையொப்பமிட்டு அந்த முத்திரையை பெற்று சென்றதாக பதிவேட்டை ராதாகிருஷ்ணன் என்பவர் பார்த்தார். அதைப் பற்றி அவர் தன்னுடைய மேல்நிலை அலுவலரான மாஹே வருவாய் வாட்டாட்சியரான தயாளன் என்பவரிடம் தெரிவித்தார்.

அ.சா.1, சத்தியன் என்வரால் பாராமரிக்கப்படும் அந்த பதிவேட்டை பார்ப்பதற்காக சென்றார். அங்கே முத்திரை தயாரிப்பாளர் போலி முத்திரையை தயார் செய்து அதை 08.12.2006 அன்று சுமேஷ் என்பவரிடம் கொடுக்கப்பட்டதாக ஒப்படைப்பு பதிவேட்டிலிருந்து தெரிந்து கொண்டார்.

அ.சா.1, காவல் நிலையத்தில் ஒரு புகாரை கொடுத்தார். அந்த புகாரின் பேரில் தலைமை காவலரான ரெனில்குமார் குற்ற எண் 158/2006 ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 472 கீழ் ஒரு வழக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா. ஆ 6 அவர் சம்பவ இடத்திற்கு சென்று அ.சா. ஆ 2 ஆன குற்ற விவர படிவத்தை இரவு 7.30 மணிக்கு தயார் செய்தார். அவர் சாட்சிகளான ராதாகிருஷ்ணன், சத்யன், ஷில்வி, பரதன் மற்றும் பிரசாத் ஆகியவர்களை விசாரணை செய்தார். சாஜித் என்ற சார்பு ஆய்வாளர் வழக்கை மேற்கொண்டு புலன் விசாரண செய்து துணை வட்டாட்சியரை விசாரணை செய்தார்.

11.01.2007 அன்று எதிரி நீதிமன்றத்தில் சரணடைந்தார். சார்பு ஆய்வாளர் 20.02.2007 அன்று சாட்சிகள் முன்னிலையில் ஒப்படைப்பு பதிவேட்டை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பினார். எதிரி காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு அவரிடமிருந்து மாதிரி கையொப்பங்கள் பெறப்பட்டது. அவர் 25.09.2007 அன்று வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து எதிரியின் விடுப்பு கடிதங்களை கைப்பற்றினார். சார்பு ஆய்வாளர் ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்தையும் ஒப்படைப்பு புத்தகத்தையும் நிபுணரின் கருத்துரை பெறுவதற்காக அனுப்பி வைத்தார். அவரின் கருத்துரையை பெற்றபின் சாட்சிகளை விசாரித்து புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 472 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 ன் கீழ் அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சூழ்நிலை குறித்து எதிரியிடம் வினவப்பட்ட போது எதிரி அதை மறுத்தார்.

TNPSC SPECIMEN

அரசு தரப்பு வாதம் :

அ.சா.5 சத்யன் என்ற முத்திரை தயாரிப்பாளர் ''கிராம நிர்வாக அதிகாரி சாலக்காரா, செம்ப்ரா,மாஹே'' என்ற பதிவுடன் ஒரு போலியான முத்திரையை செய்து கொடுக்கும்படி எதிரி கேட்டார் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். அ.சா.5 போலிசார் முன்னிலையிலும் நீதிமன்றம் முன்னிலையிலும் எதிரியை அடையாளம் காட்டியிருக்கிறார். சாட்சியால் பராமரிக்கப்பட்ட ஒப்படைப்பு பதிவேட்டும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போலியான முத்திரையை பெற்றுச் சென்ற போது எதிரி போட்ட கையொப்பமும் ஒப்படைப்பு பதிவேட்டில் இருக்கிறது. அரசு தரப்பில் எதிரியிடமிருந்து மாதிரி கையொப்பமும் மற்றும் எதிரியின் கையொப்பங்கள் அடங்கிய அவரது அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கடிதமும் பெறப்பட்டது. சர்ச்சைக்குரிய கையொப்பம் ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டு ஒப்படைப்பு பதிவேட்டில் உள்ள எழுத்தும் கையெழுத்தும் எதிரியுடையவை என்றும் அவர் போலியான முத்திரையை பெற்றுச் செல்லும் போது கையொப்பம் போட்டார் என்ற கருத்துரையும் வந்திருக்கிறது. மாஹேயில் முத்திரை செய்பவர் இல்லாததால் அரசு முத்திரைகளை செய்வதற்கு மாஹே வட்டார ஆட்சியர் அ.சா.5 ற்கு அதிகாரமளித்தார்.

எதிரி தரப்பு வாதம் :

ஒப்படைப்பு புத்தகத்தில் உள்ள எதிரியின் கையொப்பத்தை தவிர எதிரி மேற்கூறிய குற்றத்துடன் சம்மந்தபட்டுள்ளார் என்பதை காட்ட அரசு தரப்பில் வேறு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யப்படவில்லை. சத்யன் என்பவரால் செய்யப்பட்டதாக சொல்லப்படும் முத்திரையை அரசு தரப்பில் கைப்பற்றவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இரண்டு மாதம் கழித்துதான் ஒப்படைப்பு பதிவேடும் கைப்பற்றப்பட்டது. காவல் நிலையத்தில் வைத்து மகஜரில் கையொப்பம் போட்டதாக மகஜர் சாட்சி சாட்சியம் அளித்திருக்கிறார். ஆகவே ஒப்படைப்பு பதிவேட்டை கைப்பற்றியதே சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே ஒப்படைப்பு பதிவேடு உண்மையானது இல்லை என்பதையும் அது இவ்வழக்கில் எதிரியை பொய்யாக சேர்ப்பதற்கு தயார் செய்யப்பட்டது என்பதையும் அது தெளிவாக காட்டுகிறது. புலன் விசாரணை அதிகாரிகள் எதிரியை காவல் நிலையத்திற்கு வரவழைத்து எதிரியிடமிருந்து பல கையெழுத்துகள் பெற்றார்கள். ஒப்படைப்பு பதிவேட்டில் உள்ள மற்ற நபர்களின் கையெழுத்துகளை பெறாமல் எதிரியின் கையொப்பம் மட்டும் ஏன் பெறப்பட்டது என்பதற்கான விளக்கம் இல்லாததால் அரசு தரப்பு வாதம் சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. அ.சா.ஆ.4 பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட முத்திரையானது ''கிராம நிர்வாக அதிகாரி சாலக்காரா, செம்ப்ரா, மாஹே" என்று இருக்கிறது. ஆனால் அத்தகைய அலுவலகம் என்ற ஒன்றே இல்லை. ஆகவே அந்த முத்திரையானது அசல் முத்திரையுடன் ஒத்துபோகவில்லை. எதிரி முத்திரையை செய்ய சொல்லி ஆர்டர் கொடுத்ததாகவும் அந்த முத்திரையை பெற்றுக் கொண்டதாகவும் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

அரசு தரப்பு சாட்சியம் :

அ.சா. 1 ஆன மாஹே துணை வருவாய் வட்டாட்சியர் புகாரில் கண்டுள்ள சங்கதிகளை சாட்சியமாக அளித்துள்ளார்.

அ.சா. 2 ஆன ராதாகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் 26.12.2006 அன்று வாக்காளர் பதிவு அலுவலர் முத்திரையை பெற சத்யன் என்பவர் வீட்டிற்கு சென்றதாகவும் அங்கிருந்து சுமேஷ் என்பவர் முத்திரையை பெற்றுச் சென்றதாக சத்யன் என்பவரின் மனைவி கூறியதாகவும் அந்த விவரத்தை அ.சா. 1யிடம் தான் தெரிவித்ததாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

TNPSC SPECIMEN

அ.சா. 3 பார்வை மகஜர் சாட்சியாவார்.

அ.சா. 5 முத்திரை செய்பவரான சத்யன் என்பவர் தன் சாட்சியத்தில் அரசு அலுவலகங்களுக்கு முத்திரையை தயார் செய்து கொடுத்ததாகவும் 08.12.2006 அன்று எதிரி தன் வீட்டிற்கு வந்து வட்டாட்சியரின் முத்திரையை செய்து கொடுக்க கேட்டார் என்றும், எதிரி தனது அடையாள அட்டையையும் முத்திரை செய்வதற்கான மாதிரி முத்திரையையும் காட்டினார் என்றும் தான் "கிராம நிர்வாக அதிகாரி சாலக்காரா, செம்ப்ரா, மாஹே" என்ற முத்திரையை செய்ததாகவும் எதிரி அந்த முத்திரையை பெற்றுக்கொண்டு ஒப்படைப்பு பதிவேட்டில் ஒப்புகை செய்தார் என்றும் அந்த பதிவேட்டிலுள்ள சம்மந்தப்பட்ட பக்கம் அ.சா. ஆ 5 என்றும் அந்த முத்திரை பதிவு பதிவேட்டில் இடப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணையின் போது அவர் தனது சாட்சியத்தில் முத்திரையை செய்து கொடுக்கும் போது அலுவலகத்திலிருந்து கடிதத்தை கொண்டு வரும்படி கேட்பேன் என்றும், எதிரியிடம் கேட்ட போது சம்மந்தப்பட்ட அலுவலர் விடுப்பில் இருப்பதால் கடிதத்தை கொடுப்பதாக உறுதியளித்தார் என்றும் ஆகவே எதிரியின் கையொப்பம் பதிவேட்டில் பெறப்பட்டது என்றும், தயாரிக்கப்பட்ட முத்திரையை ஒப்படைக்கும் போது பராமரிக்கப்படும் ஒப்படைப்பு பதிவேடு அ.சா.ஆ. 4 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அ.சா. 6 ஆன புலன் விசாரணை அதிகாரிதான் பார்வை மகஜரை தயார் செய்து சாட்சிகளை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

சார்பு ஆய்வாளரான அ.சா. 7 தான் சாட்சிகளை விசாரித்தது பற்றியும் சாட்சிகள் முன்னிலையில் ஒப்படைப்பு பதிவேட்டை கைப்பற்றியது பற்றியும் எதிரியிடமிருந்து மாதிரி கையொப்பத்தை பெற்று அதை ஆய்வு கூடத்திற்கு அனுப்பியது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா. 8 ஆன கையெழுத்து நிபுணரான பாலசாமி தன் சாட்சியத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட மற்றும் சர்ச்சைக்குரிய எழுத்துக்கள் மற்றும் கையொப்பம் ஒரே நபரால் எழுதப்பட்டது என்று சாட்சியமளித்திருக்கிறார்.

CC No. 36/2009
State rep. by the
Station House Officer,
Mahe P.S.
(Cr. No. 158/2006)

..... Complainant

Vs.

K.P Sumesh Babu (31) ,.... Accused

<u>The case of the prosecution</u> :

On 26.12.2006 C.S.Radhakrishnan, working as peon in the Deputy Tahsildar Office, Mahe went to one Sathyan's house under the instructions of Deputy Tahsildar to get the signature rubber seal of Electoral Registration Officer, Mahe. He was informed by Sathyan's wife that one Sumesh had collected a rubber seal in the name of Village Administrative Officer, Chalakkara, Chembra, Mahe. The delivery register was shown to him. He had seen in page 93 of the register dt.03.12.2006 that the accused had signed the register and took the rubber seal. He informed the matter to his superior Dayalan, Tahsildar Revenue, Mahe.

TNPSC - SPECIMEN

PW1 went to see the register maintained by Sathyan and ascertained that the forged seal impression was made by the seal maker on the register and the seal was delivered to K.P.Sumesh on 08.12.2006. He lodged a complaint before police. Based on the complaint, HC Renil Kumar registered a case in Cr.No.158/2006 u/s 472 IPC. Ex.P6 is the F.I.R. He went to the scene of crime and prepared Crime Details Form at 19.30 Hrs. Ex.P2 is the Crime Details Form. He examined the witnesses Radhakrishnan, Sathyan, Silvi, Bharathan and Prasanth. Sajith, SI of police took up the case for further investigation and examined the Deputy Tahsildar.

On.11.01.2007, the accused surrendered before the court. On 20.02.2007, he seized the delivery book in the presence of witnesses and the same was sent to the court. The accused was summoned to the police station and sample signatures were taken. On 25.09.2007, he seized the leave letters of the accused from the office of the Deputy Director of Agriculture. He forwarded the admitted signature and delivery book for expert opinion. After obtaining the expert opinion, he examined the witnesses and completed investigation and laid charge sheet against the accused u/s 472 IPC.

When the accused was examined U/S 313 of Crpc on the incriminating circumstances appeared against him, he denied the same.

<u>Argument on the side of prosecution</u> :

PW5, the seal maker Sathyan, had deposed that the accused had ordered for making a counterfeit seal with the impression "Village Administrative Officer, Chalakkara, Chembra, Mahe". The accused had been identified by the witness PW5 in the court as well as before the police. The delivery register maintained by the witness has been seized and produced before the court. The delivery register contains the signature of the accused while taking delivery of the counterfeit seal. The prosecution had obtained sample signature from the accused and collected his admitted signatures contained in his letter submitted to his office. The disputed hand writings were forwarded to the forensic laboratory and obtained report with an opinion that the writings and signature found in the delivery register belong to the accused person and he signed the same while taking delivery of the counterfeit seal. The Regional Administrator, Mahe had authorized PW5 in his letter to make Government seals, as there is no seal maker available in Mahe.

TNPSC - SPECIMEN

Argument on the side of accused :

Except the signature of the accused in the delivery book, there is nothing produced by the prosecution to show that the accused had connection with the above offence. The prosecution had not recovered the alleged seal made by Sathyan. The delivery book was seized nearly after two months from the date of registration of F.I.R. The Mahazar witness had stated that he signed the Mahazar in the police station. Therefore, the genuineness of the seizure is doubtful. It clearly establishes that the delivery book is not a genuine one and it was created for foisting the accused in the above case. The investigating officers called the accused to the police station and obtained so many signatures from him. When there is no signature obtained from other persons in the delivery book, the prosecution case is doubtful for failure to explain why the signature of the accused alone was obtained in the register. The seal affixed in Ex.P4 book is that of "Village Administrative Officer, Chalakkara, Chembra, Mahe" but there is no such office as found in the same. So the alleged seal has no resemblance with the original seal. The prosecution had failed to prove that the accused had placed orders for making seal and took delivery of same.

Evidence on the side of Prosecution :

PW1 Dayalan, the Deputy Thasildar (Revenue), Mahe had deposed the facts stated in the complaint.

PW2 Radhakrishnan had deposed that on 26.12.2006, he went to Sathyan's house to collect the seal of Electoral Registration Officer where Sathyan's wife informed him that one Sumesh has collected seal from them. He informed the matter to PW1.

PW3 is the Scene Mahazar witness

PW5 Sathyan the rubber stamp maker deposed that he used to prepare stamp for the government offices. The accused came to his house on 08.12.2006 and asked to make stamp of Thahsildar. He showed his identity card as well as model for making rubber stamp. He made a stamp of "Village Administrative Officer, Chalakkara, Chembra, Mahe". The accused acknowledged in the delivery register and took delivery of the rubber stamp. Ex.P5 is the relevant page in the register. The stamp impression is also affixed in the register. During cross examination, he admitted that he used to insist letter from the Department while making stamp. The accused represented that the concerned officer is on leave and he undertook to produce the letter. Therefore, his signature was obtained in the register. Ex.P4 is the book maintained by him while delivering the manufactured seal.



TNPSC - SPECIMEN

PW6 the Investigating Officer, who registered the F.I.R, had deposed that he prepared Scene Mahazar and examined the witnesses.

PW7 the SI of police had deposed about the examination of the witnesses, Seizure of delivery book in the presence of witnesses, obtaining sample signature from the accused and forwarding the signature to the forensic laboratory.

PW8 Balasami, the handwriting expert had deposed that the writings and signature under dispute and the sample signatures were all written by one and the same person.

4. ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் 25/2010
அரசுக்காக
காவல் நிலைய பொறுப்பு அதிகாரி
பல்லூர் காவல் நிலையம்
(Cr.No. 39/2008) ..... புகார்தாரர்

எதிர்

ம. அராபத் (26) ..... எதிரி

அரசு தரப்பு வழக்கு :

23.4.2008 அன்று சுமார் 11.25 மணியளவில், பிரசாந்தி நிலையம், பல்லூர் முன்பு, மோட்டார் சைக்கிளில் வந்த நபர் , புகார்தாரரின் மகள் ரஜிலா கழுத்திலிருந்து 5 பவுன் தங்க தாலி சங்கிலியை பறித்து சென்றார் என்றும், ரஜிலா எழுப்பிய சத்தத்தை கேட்டு அக்கம் பக்கத்திலிருந்து நபர்கள் வந்தவுடன் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், ரஜிலா தன் தந்தைக்கு தகவல் தெரிவித்து, அவர் அ.சா.ஆ. 1 புகாரினை கொடுத்துள்ளார்.

அந்த புகாரின் அடிப்படையில், தலைமை காவலர் விஜயன் கு.எண் 39/08ல் வழக்கு பதிவு செய்து, சம்பவ இடம் சென்று, தனிநபர் சாட்சிகள் ரவீந்திரன், மற்றும் பிரபாகரன் முன்பு குற்ற விவரப் படிவம் தயாரித்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆகும்.

இரண்டு மாதங்கள் கழித்து போலிசார், புகார்தாரரின் மகளை தங்க சங்கிலி மற்றும் எதிரியை அடையாளம் காண்பிக்க அழைத்ததன் பேரில் அவர் காவல் நிலையம் சென்று சா. பொ.1 ஆன தங்க சங்கிலி மற்றும் எதிரியை அடையாளம் காண்பித்தார்.

26.06.2008 அன்று காவல்துறை சார்பு ஆய்வாளர் சுந்தர் வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்தார். அதே தினம், அவருக்கு எதிரியை மாஹே காவல்நிலைய கு. எண் 58/2008 ல் கைது செய்த விவரம் கிடைத்தது. 11.7.2008 அன்று எதிரி பி.டி வாரண்டின் பேரில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். 26/07/2008 அன்று சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 31.07.2008 அன்று எதிரியின் மீது இ.த.ச. 356,379 பிரிவுகளின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

எதிரிக்கு பாதகமான சங்கதிகளை எடுத்துக்கூறி வினவிய போது எதிரி அதனை மறுத்தார்.

TNPSC - SPECIMEN

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் :

அ.சா. 1 : புகார்தாரரின் மகளின் தங்க சங்கிலி பிரசாந்தி நிலையம் முன்பு, மோட்டார் சைக்கிளில் வந்த எதிரியால் பறிக்கப்பட்டதாக கிடைத்த தகவலின் பேரில் புகார் கொடுத்தார். பின்னர் இரண்டு மாதங்கள் கழித்து, அவரது மகள் எதிரியை அடையாளம் காட்ட காவல்நிலையம் அழைக்கப்பட்டார். அவரது மகளுக்கு சம்பவத்தில் காயம் ஏதும் ஏற்படவில்லை. மேலும் தங்க சங்கிலியின் கொக்கி திறந்திருந்தது.

அ.சா. 2 : தன் சாட்சியத்தில் 23/4/2008 காலை 11.15 மணியளவில் தன் கணவரின் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, எதிரி பைக்கில் கூலிங்கிளாஸ் மற்றும் கைக்குட்டையை அணிந்து தனக்கு எதிர் திசையில் தன்னை கடந்து சென்றார் என்றும் பின்னர் பின்னால் வந்து தனது 5 பவுன் தாலி சங்கிலியை பறித்ததாகவும், அப்போது தாலி தனியாக வந்ததாகவும், தான் கூச்சலிட்டதாகவும், அக்கம் பக்கத்திலிருந்த நபர்களும், தன் தந்தையும் வந்ததாகவும், எதிரி அங்கிருந்து சென்று விட்டதாகவும், அதன் பின்னர் தன் தந்தை புகார் கொடுத்ததாகவும், 26/06/2008 அன்று மாஹே காவல்நிலையத்தில் எதிரி மற்றும் தங்க சங்கிலியை அடையாளம் காண்பித்ததாகவும் கூறியுள்ளார். மேலும் தனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், சங்கிலியின் கொக்கி திறந்ததனால் லாக்கெட் கீழே விழுந்தது என்றும், போலிசார் 3 நகைகளை காண்பித்தனர் என்றும், தான் தனது சங்கிலியை அடையாளம் காண்பித்ததாகவும், தான் ஆசிரியையாக பணி செய்வதாகவும், எதிரியை தனக்கு முன்பு பரிட்சயம் இல்லை என்றும், போலிஸ் விசாரணையின் போது, எதிரியின் அங்க அடையாளங்களையும், சங்கிலியையும் விவரிக்கவில்லை என்றும், சம்பவத்திற்கு 6 மாதங்கள் முன்பிருந்தே தான் அந்த சங்கிலியை தொடர்ந்து அணிந்து வந்ததாகவும் கூறியுள்ளார்.

அ.சா. 3 : தன் சாட்சியத்தில் தான் கருப்பு நிற கூலிங்கிளாஸ் மற்றும் முன்னந்தலையில் கைக்குட்டை கட்டி பைக்கில் நம்மத் சாலையை நோக்கி செல்லும் நபரைப் பார்த்ததாகவும், பின்னர் 5 நிமிடங்களுக்குள் அந்த நபர் திரும்ப தலசேரி நோக்கி சென்றதை பார்த்ததாகவும், சம்பவ இடத்தில் பார்த்த நபர் தான் ஆஜர் எதிரி என்றும் அடையாளம் காண்பித்துள்ளார்.

அ.சா. 4 : பார்வை மகஜர் சாட்சி ஆவார்.

அ.சா. 6 : ஜலீல் தன் சாட்சியத்தில் தான் ஜுவல் பேலஸ் என்ற கடை நடத்தி வருவதாகவும், போலிசார் எதிரியை தன் கடைக்கு அழைத்து வந்து, எதிரி விற்ற 5 பவுன் தங்க சங்கிலி குறித்து விசாரித்ததாகவும் கூறியுள்ளார்.

அ.சா. 7 : நான் 2008 ஆம் ஆண்டு மாஹே காவல்நிலையத்தில் ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையொப்பம் செய்ததாகவும், ஒப்புதல் வாக்கு மூலம் அளித்த நபரின் பெயர் மற்றும் அடையாளம் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். இவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் இவர்தான் அ.சா.ஆ. 3 ல் கண்டுள்ள சங்கதிகளை படித்து புரிந்துக் கொள்ளவில்லை என்றும், மேலும் தான் 10 க்கும் மேற்பட்ட வழக்குகளில் அரசு சாட்சியாக இருந்துள்ளதாகவும் ஒப்புக் கொண்டுள்ளார்.

TNPSC - SPECIMEN

அ.சா. 8 : தலைமை காவலர் தனது சாட்சியத்தில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குற்ற விவரப் படிவம் தயாரித்தது குறித்தும் கூறியுள்ளார்.

அ.சா. 10 : 11 விசாரணை அதிகாரிகள் வழக்கில் எவ்வாறு விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து சாட்சியமளித்துள்ளார்கள்.

எதிரி தரப்பு வாதம் :

எதிரிக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டத் தெரியாது, ஓட்டுனர் உரிமமும் இல்லை. அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை. புகாரிலும், குவிமுச 161 கீழான வாக்குமூலத்திலும், எதிரியின் அடையாளம் குறிப்பிடப்படவில்லை. நீதித்துறை நடுவர் முன்பு அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை எதிரியால் ஓட்டிவரப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தை பாதிக்கப்பட்ட நபர் அடையாளம் காண்பிக்கவில்லை. சம்பவ இடம் மாறுபட்டுள்ளது. அந்த முரண்பாடு முறையாக விளக்கப்படவில்லை. கைப்பற்றுதல் மகஜர் சாட்சி அரசு தரப்பு வழக்கினை ஒத்து சாட்சியமளிக்கவில்லை. பாதிக்கப்பட்டவரின் ஒத்துறுதி செய்யப்படாத சாட்சியம் மட்டுமே உள்ளது. எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும்.

CC 25/2010

State rep. by the

Station House Officer,

Palloor P.S.

(Cr.No. 39/2008) ...... Complainant

Vs.

M. Arafath (26), ...... Accused

The case of the prosecution :

On 23.04.2008 at about 11.25 hrs, in front of the "Prasanthi Nilayam", Palloor, the accused came in a motor cycle and snatched 5 sovereign of gold locket "Thali" chain from the neck of complainant's daughter Rejila. The person from the locality came there on hearing the hue and cry of her and the accused left the place. She informed her father, who lodged ExP1 complaint,

Based on the complaint, the Head Constable Vijayan registered a case in Cr. No.39/08 and visited the scene of crime and prepared Crime Detail Form in the presence of independent witnesses Raveendran and Prabhakaran. Ex.P2 is the Scene Mahazar.

After two months, police summoned his daughter PW2 to identify the gold chain and the accused. She identified her chain MO-1 and the accused.

On 26.06.2008, S.I Sundar took up the case for further investigation. On that day, he received an information that the accused was arrested by SI of Mahe PS in Cr.58/08 of Mahe PS. On 11.07.2008, the accused was produced through P.T. Warrant and remanded in this case. On 26.07.2008, the witnesses were examined and recorded their statement. On 31.07.2008, he laid charge sheet against the accused u/s 356, 379 IPC.

When the accused was questioned with regard to the incriminating circumstances, the same were denied by the accused.

TNPSC - SPECIMEN

Evidence on the side of Prosecution Witnesses :

PW1 was informed about the chain snatch by the accused who came in the motor cycle in front of "Padayil Nilayam". The complaint was lodged by him and after two months, his daughter was summoned to identify the accused in the police station. No injury was sustained by his daughter in the incident and the hook of the chain was found opened.

PW2 deposed that on 23.04.2008, while she was going towards her husband's house at 11.15 a.m, the accused came in the opposite direction in the bike wearing a cooling glass and wearing a kerchief and he returned and came from her back and snatched her gold chain weighing 5 sovereigns. While snatching, the locket (Thali) was removed from the chain and she began to cry loudly. When the public from the locality and her father came, the accused left the place. Her father gave a complaint.

On 26.6.2008, she was summoned to Mahe police station where she identified the accused and the gold chain (MO-1). She admitted that there was no injury in the incident. The hook of the chain was opened, the locket fell down. The police kept 3 jewels for identification and she identified her chain. She is working as a teacher and prior to the incident she is not acquainted with the accused. During police examination, she had not given the description of the accused and the chain. Prior to the incident, she was continuously wearing the chain for 6 months.

PW 3, the witness deposed that he had noticed a person wearing a black cooling glass and tied a cloth on his forehead. He was driving a bike and proceeding towards Namath road and within 5 minutes, he returned and proceeded to Thalassery. He identified the accused person standing in the box as the accused found in the scene of crime.

PW 4 is a witness for Scene Mahazar.

PW6 Jaleel deposed that he is running a shop "Jewel Palace" and the police took the accused to his shop to enquire about a gold jewel weighing 5 sovereigns sold by the accused.

TNPSC - SPECIMEN

PW 7 the witness for the confession statement had admitted that during 2008, he signed in Mahe police station as a witness in the confession statement and he could not recollect the name of the accused and could not identify him. He was treated as hostile by the learned APP. During cross examination by APP, he admitted that he had not read and understood the contents of the Ex.P3. He admitted that he was a witness in more than 10 cases on the prosecution side before this court.

PW 8 the Head Constable registered the case and prepared Crime Detail Form.

The Investigating Officer PW10 and PW11 have deposed about the manner in which the investigation was conducted.

<u>Argument of the learned counsel for the accused</u>.

The accused does not know to drive motor cycle and he was not holding Driving License. He had not made voluntary confession statement as alleged.

In the complaint as well as in the 161 CrPc statement of the victim, the description of the accused was not given. No identification parade was conducted before the Magistrate to identify the accused.

The vehicle used by the accused was not identified by the victim.

The place of occurrence differs and the contradiction put forth was not satisfactorily explained by the prosecution.

The witness for the confession statement and the seizure had not supported the case of prosecution and the only piece of evidence available is the evidence of the victim whose evidence cannot be taken into account without corroboration. Hence he prays for acquittal of the accused person.

---

SEAL

TNPSC - SPECIMEN